## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.54/2019

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சங்கர் | மதம் | : இந்து |
| த/பெ | : தனபால் | ஜாதி | : -- |
| வயது | : 27 | கிராமம் | : மாமண்டூர் |
| தொழில் | : இருசக்கர வாகன ஆலோசகர் | வட்டம் | : திருத்தணி |

**06.03.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கில் முனுசாமியும், சாமந்தியும் சித்தப்பா, சித்தி என்றால் சரிதான். எனக்கு என்ன வயது என்றால் 27 வயதாகும். எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் இதுநாள் வரை என் சித்தப்பா என் வீட்டின் அருகில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். என் வீடும் பிரதிவாதி வீடும் அருகருகில் உள்ளது என்றாலும் எங்கள் இருவர் வீட்டிற்கும் வடக்கே கிழமேல் தெரு உள்ளது என்றாலும் சரிதான். இரு வீட்டிற்கும் இடையே நாலடி பொது சந்து விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் புல எண் என்ன என்றால் பழைய எண்.159/2 ஆகும். புதிய எண்.159/2H ஆகும். தெருவிற்கு அருகே எனக்கும் சித்தப்பாவிற்கும் பாத்தியப்பட்ட காலியிடம் உள்ளது என்றால் காலியிடம் எதுவும் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தெருவிற்கு அருகே எனக்கும் சித்தப்பாவிற்கும் பாத்தியப்பட்ட காலியிடம் உள்ளது என்றாலும் இல்லை.

2. நான் யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் S.R. பெரியசாமி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். S.R. பெரியசாமியின் அப்பா பெயர் என்ன என்றால் ரத்தினசாமி ஆகும். நான் கிரையம் பெற்றதாக சொல்லும்

காலக்கட்டத்தில் நான் இளவர் என்றால் ஆமாம். எனவே கிரைய விவரம் என் அப்பாவிற்குதான் தெரியும் என்றால் ஆமாம். என் அப்பாவை இந்த வழக்கில் விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. 40 வருடங்களுக்கு முன்பு என் அப்பா வாய்மொழியாக வாங்கி 2015ல் என் அப்பா என் பெயரில் கிரைய ஆவணம் வாங்கியதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் அவ்வாறு வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. நான் கிரையம் வாங்கிய சொத்தில்தான் நானும் சித்தப்பாவும் குடியுள்ளோம் என்றால் இல்லை. ரத்தினசாமி ரெட்டி மகன் பெரியசாமி ரெட்டியிடம் கிரையம் வாங்கும் முன்பு வழக்கு சொத்திற்கு பெரியசாமி ரெட்டி பெயருக்கு ஏதேனும் ஆவணங்கள் இருந்ததா என்பதை பார்த்தேனா என்றால் அதை நான் பார்க்கவில்லை. என் தாத்தா பெயர் என்ன என்றால் பெரியசாமி ரெட்டி ஆகும். என் தாத்தா பெயர் செவ்வாய் பெரியசாமி ரெட்டி என்றால் ஆமாம். நான் கிரையம் பெற்றதாக சொல்லும் சொத்து என் தாத்தா செவ்வாய் பெரியசாமி ரெட்டிக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றால் இல்லை. UDR காலக்கட்டத்தில் வழக்கு சொத்தும் அந்த தெருவில் உள்ள வேறு 10 நபர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தும் தவறுதலாக S.R. பெரியசாமி பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது என்றாலும் அதை பயன்படுத்திகொண்டு என் அப்பா S.R. பெரியசாமியுடன் சேர்ந்து என் சித்தப்பாவுடன் உள்ள பகையை மனதில் வைத்துகொண்டு மோசடியாக ஆவணம் உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல.

4. என் அப்பாவுடன் பிறந்தவர் எத்தனை பேர் என்றால் 1. தனபால், 2.முனுசாமி, 3. பட்டு, 4. சுந்தரம் மற்றொருவர் பெயர் தெரியவில்லை. என் அப்பாவுடன் பிறந்த மற்றவர்கள் உயிருடன் உள்ளார்களா என்றால் உயிருடன் உள்ளார்கள். தெய்வாணை, சுந்தரம், ராணி, பட்டு, 1ம் வாதியான என் அப்பா மற்றும் பிரதிவாதி முனுசாமி ஆகியோர் 6 பேர் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா என் அப்பா, என் தாத்தா செவ்வாய்

பெரியசாமி ரெட்டி பெயரில் கொடுக்கப்பட்ட கூட்டு பட்டா என்றால் சரிதான். (**சாட்சி ஒப்புக்கொண்டதால் செட்டில்மெண்ட் கால ஜமாபந்தி சிட்டா பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் S.R. பெரியசாமி பெயர் உள்ளதா என்றால் இல்லை.

5. வழக்கு சொத்தும் அதனுடன் சேர்ந்த இதர சொத்துக்களும் ஆதியில் செவ்வாய் பெரியசாமி ரெட்டி பெயரில் இருந்தது என்றாலும் UDR காலத்தில் தவறுதலாக S.R பெரியசாமி பெயருக்கு ஏற்பட்ட பட்டாவை வைத்து கொண்டு நாங்கள் மோசடியாக ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் தாத்தா செவ்வாய் பெரியசாமி ரெட்டி எப்போது இறந்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு சொத்து என் தாத்தாவிற்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் என் தாத்தா காலத்திலேயே என் அப்பாவும் என் சித்தப்பாவும் சரி சமமாக பிரித்து கொண்டு அவரவர் பாகத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது வீட்டின் மின் கட்டண எண் என்ன என்றால் 114 ஆகும். அந்த மின் இணைப்பு எண்ணும் என் தாத்தா உயிருடன் இருக்கும்போது என் அப்பா மூத்த மகன் என்ற அடிப்படையில் என் அப்பா பெயருக்கு வாங்கப்பட்டது என்றால் இல்லை.

6. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள் வழக்கு சொத்திற்கு சம்மந்தமில்லாதவை என்றாலும் அவை பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. எனது வீட்டின் அளவு சொல்ல முடியுமா என்றால் கிழமேல் 16 அடி தென்வடல் 23 அடியாகும். என் சித்தப்பா வீட்டின் அளவு என்ன என்றால் அது எனக்கு தெரியாது. என் சித்தப்பா வீடும் 16க்கு 33 அடி என்ற அளவில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் தாத்தா உயிருடன் இருக்கும்போதே என் அப்பாவும் சித்தப்பாவும் தனித்தனியாக பிரித்து கொண்டனர் என்றாலும் என் சித்தப்பாவின் கூரை வீடு இடிந்த பின்புதான் அதில் என் சித்தப்பா தளம் போட்டு வீடு கட்டினார் என்றால் தெரியாது. S.R.பெரியசாமிக்கு வழக்கு சொத்து பாத்தியம் இல்லை என்பது தெரிந்து கிரையம் பெற்று பிரதிவாதியை தொந்தரவு செய்து வருகிறோம் என்றால்

சரியல்ல.

7. ரத்தினசாமி ரெட்டி மகன் S.R.பெரியசாமி பெயரில் தவறுதலாக UDRகாலத்தில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்யவும் எங்கள் பெயரில் தவறுதலாக கொடுக்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யவும் பிரதிவாதி மனு கொடுத்து நடவடிக்கை எடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. பட்டா மாறுதல் மனு விசாரணை குறித்த அறிவிப்பு என் அப்பாவிற்கு அனுப்பப்பட்டது என்றாலும் நான் வேண்டுமென்றே தெரிந்து கொண்டு பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் தெருவில் உள்ள பத்து நபர்களும் வருவாய் கோட்டாட்சியர் விசாரணைக்கு ஆஜராகி சாட்சியம் கொடுத்துள்ளனர் என்றால் எனக்கு தெரியாது. எங்கள் தெருவில் உள்ள பத்து நபர்களும் வருவாய் கோட்டாட்சியர் விசாரணைக்கு ஆஜராகி அவர்களது சொத்திற்கும் தவறுதலாக S.R. பெரியசாமி பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டுவிட்டதாக சாட்சியம் கொடுத்துள்ளனர் என்றாலும் நான் அதை தெரிந்துகொண்டே வேண்டுமென்றே பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

8. என்னிடம் காட்டப்படும் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவில் வருவாய் கோட்டாட்சியர் விசாரணைக்கு எங்கள் கிராம நிர்வாக அதிகாரியும் ஆஜராகி சாட்சியம் கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது என்னுடைய சொத்து இல்லை. அதில் என்னுடைய சொத்தான புல எண்.159/2Hன் அளவுகளும் இல்லை. என்னுடைய சொத்திற்குதான் வருவாய் கோட்டாட்சியர் விசாரணை நடத்தி 08.08.2023ல் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றாலும் நான் வேண்டுமென்றே உண்மை விவரங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் விசாரணையில் என் அப்பா ஆஜராகி இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால் அந்த விசாரணையை நிறுத்த மனு கொடுத்தார் என்றால் சரிதான். என் அப்பா மனு கொடுத்ததன் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர் விசாரணையை நிறுத்தி உத்தரவிட்டுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவில் என் அப்பா மனு கொடுத்ததால் விசாரணையை

நிறுத்தி உத்தரவிட்டுள்ளார் என்றால் ஆமாம். (**சாட்சி ஒப்புக்கொண்டதால் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

9. வருவாய் கோட்டாட்சியர் உத்தரவின் சங்கதிகளில் இருந்து வழக்கு சொத்து S.R. பெரியசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்பது தெரிய வரும் நிலையில் வேண்டுமென்றே பிரதிவாதியை மோசடி செய்ய வேண்டி என் பெயரில் ஆவணம் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் சித்தப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தை அவரின் மனைவிக்கு எப்போது செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் 2019 ஆகும். எனக்கு இந்த விவரம் 2019லேயே தெரியும் என்றால் சரிதான். நான் 2024ல்தான் அந்த ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கோரினேன் என்றால் ஆமாம். எனக்கு விவரம் தெரிய வந்து 3 வருடங்களுக்குள் நாங்கள் பரிகாரம் கோரியிருக்க வேண்டும் என்றாலும் காலம் கடந்து நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றாலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் ஆவணத்தை செல்லாது என பரிகாரம் கோர எனக்கு எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல.

10. வழக்கு சொத்து முழுவதும் பூர்வீக சொத்து என்றாலும் என் அப்பாவும் சித்தப்பாவும் பாகம் பிரித்து அனுபவித்து வரும் சொத்தில் நான் சம்மந்தமில்லாத நபரிடம் பெற்றுள்ள கிரையம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த S.R. பெரியசாமியை விசாரிக்க போகிறேனா என்றால் ஆமாம். பிரதிவாதிகள் எப்போது என்னை தொந்தரவு செய்தார்கள் என்றால் 10.08.2019ல் பிரச்சனை செய்தார்கள். என்ன இடையூறு செய்தார் என்றால் பசுமை வீடு திட்டத்தில் நாங்கள் வீடு கட்ட முயற்சித்த போது 1ம் பிரதிவாதி வந்து இடையூறு செய்தார். அதுபோல் எந்த பிரச்சனையும் நடைபெறவில்லை என்றாலும் நான்தான் தேவையற்று தொந்தரவு செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. எனது வழக்கிற்கு வழக்கு மூலமே இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் என் அப்பாவை விசாரித்தால் உண்மை நிலை

தெரிந்துவிடும் என்பதால் அவரை விசாரிக்காமல் உள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்கு தவறானது என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)